பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID காப்புறுதி பத்திரம்**

**சூரிய வலு பாதுகாப்பு காப்புறுதி பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

சூரிய வலு பாதுகாப்பு காப்புறுதி பத்திரமானது, சூரிய வலுச் சட்டம், மாற்றிகள் மற்றும் சம்பந்தப்பட்ட வதிவிட சூரிய வலு அமைப்புகளுக்கு தீ, இயற்கை அனர்த்தங்கள், மின்சாரக் கோளாறுகள் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட சம்பவங்களினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திலிருந்தும் பாதுகாப்பு வழங்குகின்றது. இடிபாடுகளை அகற்றுதல் மற்றும் சேதமடைந்த சட்டங்களை கொண்டு செல்லுதல் போன்ற சம்பந்தப்பட்ட சில மேலதிக பயன்பாடுகளையும் காப்புறுதிப் பத்திரம் வழங்குகின்றது.

**2. எதனைக் காப்பீடு செய்கின்றது?**

இக்காப்புறுதப் பத்திரமானது, தீ மற்றும் மின்னல், நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, சூறாவளி, புயல், சுழற்காற்று, சுனாமி, கடலலை, வெள்ளம், மின்சாரக் கோளாறுகள் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட சம்பவங்களினால் சூரய வலு அமைப்புகளுக்கு ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதத்திலிருந்தும் பாதுகாப்பு வழங்குகின்றது.

சேர்க்கப்படத் தக்கன பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- சட்டச் செலவினங்கள் – இரூ 5,000 வரை.
- இடிபாடுகள் அகற்றல் - இரூ 5,000 வரை.
- கட்டிட திருத்த வேலைகளுக்காக அகற்றுதல் மற்றும் இடமாற்றல் என்பவற்றுக்கான செலவினங்கள் – இரூ 10,000 வரை.
- திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லல் மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது சேதம் - இரூ 5,000 வரை.
- (வேறெங்கும் காப்புறுதி செய்யப்படா விடத்து சூரி வலு தொகுதி பொறுத்தப்பட்டுள்ள கட்டிடம் / அமைப்புக்குச் சேதம். இரூ 5,000 வரை.
- சேதமடைந்த சூரிய வலு சட்டத்தை சேவை முகவரிடம் கொண்டு செல்லல் - இரூ 5,000 வரை.
- விலங்குகளினால் மின் கேபிள்களுக்கு ஏற்படும் சேதம் - இரூ 5,000 வரை.

**3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

காப்புறுதி பெறுனரின் வன்முறைச் செயல்கள் வழமையான தேய்மானம் அல்லது தொழில்நுட்ப அல்லது மின்சார செயலிழப்பினால் ஏற்பட்ட இழப்பு, சேதங்களை இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு செய்வதில்லை.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

கோரிக்கையொன்றுக்கு வழிகோளத்தக்க ஏதும் இழப்பு, சேதம், அத்துடன், ஆபத்தின் மீது தாக்கம் செலுத்தக் கூடிய ஏதும் குறைபாடுகள் அல்லது இயக்கப்பாட்டு மாற்றங்கள் பற்றி பயார்பஸ்ட் இன்சூரன்ஸ் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

கோரிக்கை முன்வைக்கத் தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட ஆதனத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், காப்புறுதி வழங்குனரின் சம்மதம் பெறப்பட்டிருந்தால் அன்றி, சேதமடைந்த அம்சங்கள் மாற்றப்படாமலும் திருத்தப்படாமலும், பார்வைக்காக பாதுகாக்கப்படல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட ஆதார சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் யாவும் வழங்கப்பட வேண்டியதுடன், விசாரணையின் போது முழு ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும். மற்றும்.

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

7. **மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.